## கொரோனா விழிப்புணர்வு:

# மெட்ரோ ரெயில் நிலையத்தில் கலை நிகழ்ச்சி

## திருமங்கலத்தில் நடந்தது

சென்னை, நவ.9–

சென்னையில் மெட்ரோ ரெயில் பயணம் செய்யும் பயணிகளுக்கு கொரோனா நோய் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் நிமிர்வு கலையகம் சார்பில் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. இதில் நோய் தடுப்பு குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், மெட்ரோ ரெயிலில் பாதுகாப்பான பயணம் உள்ளிட்ட கருத்துகள் வலியுறுத்தப்பட்டன. பயணிகள் மற்றும் பொதுமக்கள் இதனை கண்டுகளித்தனர்.